தி.மு.க. தலைவரின்

# அரசியல் தலைமைப் பண்பை நிலைநாட்டும் அறிவிப்பு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு!

சென்னை, மே 8-

விஜய் ஆட்சி அமைக்க இடையூறாக இருக்கமாட்டோம்! என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள்

“இவ்வறிவிப்பு, தி.மு.க. தலைவரின் அரசியல் தலைமைப் பண்பை நிலை நாட்டும் அறிவிப்பு!” என்று பாராட்டியுள்ளார்.



வைகோ அவர்களின் அவ்வறிக்கை வருமாறு:-

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்று தி.மு. கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டத்தக்கதும், உரிய நேரத்தில் சொல்லப்பட்டதும், அன்னாரது அரசியல் தலைமைப் பண்பை நிலைநாட்டுவதுமான அறிவிப்பாகும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குறிப்பிட்டுள்ளார்.

இரா.கிரிராஜன் எம்.பி. பரிந்துரையையேற்று

# கொளத்தூரைச் சேர்ந்த 2 நபர்களுக்கு ரூ. 3.50 லட்சம் நிதி!

## பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கல்!

புதுடெல்லி,மே 8-

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன் பரிந்துரையையேற்று பிரதமர் நிவாரண நிதியிலிருந்து கொளத்தூரைச் சார்ந்த இரண்டு நபர்களுக்கு ரூ. 3.50 லட்சம் மருத்துவ உதவிக்கு வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.



சென்னை கொளத்தூரைச் சேர்ந்த இரண்டு நபர்களின் சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 3.50 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், தி.மு.க சட்டதிட்ட திருத்தக்குழு செயலாளருமான இரா. கிரிராஜன் விடுத்த பரிந்துரையை ஏற்று பிரதமர் அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சென்னை கொளத்தூரைச் சேர்ந்த வெங்கப்பன் அவர்களின் புற்று நோய் சிகிச்சைக்காக ரூ. 3 லட்சமும், சிறுவன் ஆனந்த் அவர்களின் இருதய நோய் சிகிச்சைக்காக ரூ. 50 ஆயிரமும் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதங்களை மருத்துவமனைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரிராஜன் அவர்களுக்கும் பிரதமர் அலுவலகம் அனுப்பியுள்ளது.

சிகிச்சைக்கான மொத்த தொகையான ரூ. 3.50 லட்சம், நோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர் உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் பா.ஜ.க.வினர் வன்முறை வெறியாட்டம்!

# தோழர் லெனின் சிலை உடைப்பு - கட்சி அலுவலகங்கள் மீது தாக்குதல்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையான கண்டனம்!

சென்னை, மே 8-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி எஸ்.ஐ.ஆர். செயல்முறை வாயிலாக முறைகேடாக வெற்றி பெற்றதையொட்டி, அம்மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்களில் பா.ஜ.க. குண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, எதிர்கட்சிகளின் அலுவலகங்கள், கொடிக் கம்பங்கள், தோழர்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள உலகத் தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவர் மாமேதை தோழர் லெனின் சிலையை உடைத்துள்ளனர். அதேபோன்று, திரிபுரா மாநிலத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். பா.ஜ.க. குண்டர்களின் இந்த அராஜக வன்முறை தாக்குதல்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

பாசிச சக்திகள் லெனின் சிலையை சேதப்படுத்தினாலும் அவரது சித்தாந்தத்தை ஒருபோதும் அழிக்க முடியாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்ட விரும்புகிறது.

தோழர் லெனின் சிலையை உடைத்து, எதிர்க்கட்சி அலுவலகங்களையும், தோழர்களையும் தாக்கி வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் பா.ஜ.க. குண்டர்களை அம்மாநில காவல்துறை உடனடியாக கைது செய்து அமைதியை ஏற்படுத்திட வேண்டுமெனவும், பா.ஜ.க.வினரின் இந்த அராஜக வன்முறை வெறியாட்டங்களை கண்டித்து ஜனநாயக சக்திகள் தங்களது வலுவான கண்டன குரலை எழுப்பிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி 48 மணி நேரம் முடிவதற்குள்

# பி.எம். ஸ்ரீ திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க - ஒன்றிய அரசு கடிதம்!

## இந்திய மாணவர் சங்கம் கடும் கண்டனம் !

சென்னை, மே 8-

இதுகுறித்து இந்திய மாணவர் சங்கத்தின் தமிழ்நாடு மாநிலக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் பி.எம்.ஸ்ரீ திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற அரசியல் நிபந்தனையுடன் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய கல்வி நிதியை தொடர்ந்து நிலுவையில் வைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய சுமார் 2 ஆயிரத்து 151 கோடி நிதியை தாமதப்படுத்தி, புதிய கல்விக் கொள்கை மற்றும் PM SHRI திட்டத்தை மாநிலத்தின் மீது திணிக்க முயற்சிப்பது கூட்டாட்சி அமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு நேரடி அச்சுறுத்தலாகும் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கல்வி என்பது அரசியல் பேரம் பேசும் கருவி அல்ல; அது மாணவர்களின் அடிப்படை உரிமை. ஆனால் ஒன்றிய அரசு, கல்வி நிதியை ஒரு அரசியல் அழுத்த கருவியாக மாற்றி மாநிலங்களின் கொள்கை சுயாட்சியை பலவீனப்படுத்த முயற்சிக்கிறது என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில உரிமைகளை மீறும் வகையில் கல்வியில் தலையிடும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில்

# 223 கேமராக்கள் பொருத்தும் பணி தீவிரம்!

சென்னை மே 8-

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தும் வகையில் 223 கேமராக்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுகுறித்து சென்னை ரயில்வே பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஏற்கெனவே நடைமேடை உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன. அவை வழக்கமான குறிப்பிட்ட காட்சிகளைப் பதிவு செய்யும் வகையில் உள்ளன. ஆனால், தற்போது ரயில்களில் உரிய ஆவணங்களின்றி தங்கம் வெள்ளி மற்றும் பொருள்கள் கடத்தல் அதிகரித்திருப்பதாக புகார்கள் எழுந்துள்ளன. மற்றும் ஹவாலா பணம், போதைப் பொருள் கடத்தல் அதிகரித்திருப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

இதை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த ஜனவரி முதல் தற்போது வரை அதிக அளவிலான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன. ரயில் நிலைய வளாகத்தில் பயணிகள் தவிர சம்பந்தமில்லாத நிலையில் நூற்றுக் கணக்கானோர் தங்கி வருவதாகவும், அவர்களால் திருட்டு உள்ளிட்ட குற்றச் சம்பவங்கள் அதிகம் நடப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இதனால், ரயில் நிலைய வளாகத்தை 24 மணி நேரமும் கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு பொருள்கள் கடத்தல் கேமராக்கள் பொருத்தும் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் தொடங்கியது. ஆனால், அப்பணிகள் திடீரென நிறுத்தப்பட்டன. இதற்கிடையே தற்போது 19 இடங்களில் கம்பம் நட்டு அதில் அதிநவீன கேமராக்கள் பொருத்தும் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுளள்ன.

ரயில் நிலையத்தில் ஒரே பகுதியைக் கண்காணித்து படம் பிடிக்கும் வகையில் 150 நிலையான கேமராக்களும், 45 யுஎச்டி கேமராக்களும், எல்லா திசையிலும் சுழன்று காட்சி களைப் படம் பிடிக்கும் 14 கேமராக்களும், காட்சி களைப் பெரிதுபடுத்திப் பார்க்கும் வகையிலான 7 கேமராக்களும் என மொத்தம் 223 கேமராக்கள் இந்த மாத இறு திக்குள் பொருத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை பிடிக்காமல் காங்கிரஸ் மண்டலத் தலைவர் கார்த்திக் தி.மு.க.வில் இணைந்தார். திண்டுக்கல் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவரும், காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவருமான கார்த்திக் நேற்று முன்தினம் மாலை கலைஞர் மாளிகை தி.மு.க.அலுவலகத்தில் மாநகர தி.மு.க. செயலாளர் ராஜப்பா முன்னிலையில் தன்னை தி.மு.க. வில் இணைத்துக்கொண்டார். இந்நிகழ்வில் மேயர் இளமதி, மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன், மாநகர துணை செயலாளர் அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி பொறுப்பாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்லுல் ஹக், சந்திரசேகர், சூசை ராபர்ட், மண்டல தலை வர்கள் ஆனந்த், ஜான் பீட்டர், மாவட்ட பிரதிநிதி கள் அஞ்சல் கணேசன், ஆனந்த்குமார், ஏ.வி.குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ், பாலகிருஷ்ணாபுரம் பாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் பிடிக்காமல்

# காங்கிரஸ் மண்டலத் தலைவர் கார்த்திக் தி.மு.க.வில் இணைந்தார்!

## மாநகரச் செயலாளர் ராஜப்பா முன்னிலையில்!

திண்டுக்கல்.மே 8-

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை பிடிக்காமல் காங்கிரஸ் மண்டலத் தலைவர் தி.மு.க.வில் இணைந்தார்.

திண்டுக்கல் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவரும், காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவருமான கார்த்திக் நேற்றுமுன்தினம் மாலை கலைஞர் மாளிகை தி.மு.க. அலுவலகத்தில் மாநகர தி.மு.க. செயலாளர் ராஜப்பா முன்னிலையில் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மேயர் இளமதி, மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன், மாநகர துணை செயலாளர் அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி பொறுப்பாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்லுல் ஹக், சந்திரசேகர், சூசை ராபர்ட், மண்டல தலைவர்கள் ஆனந்த், ஜான் பீட்டர், மாவட்ட பிரதிநிதிகள் அஞ்சல் கணேசன், ஆனந்த் குமார், ஏ.வி.குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ், பாலகிருஷ்ணாபுரம் பாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகிய

# 7 எம்.பி.க்களை பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

## குடியரசுத் தலைவரிடம் – பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் வலியுறுத்தல்!

புதுடில்லி, மே 8-

பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியி லிருந்து விலகி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்த 6 நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களை (எம்பிக்கள்) உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் 24ஆம் தேதி, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 பேர் அக்கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்தனர். இவர்களில் 7 பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

5.5.2026 அன்று குடியரசுத் தலைவரைச் சந்தித்த முதலமைச்சர் பகவந்த் மான், கட்சி மாறியவர்களின் பதவியை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்காக ஆம் ஆத்மி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்ட அதிகாரப்பூர்வ ஆவணங்களையும் அவர் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தார். இதற்கிடையில், ஆம் ஆத்மியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த எம்பி ராகவ் சதா, பஞ்சாப் அரசு தங்களைப் பழிவாங்கும் நோக்கில் செயல்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு இயந்திரம் அத்துமீறல்: “ஆம் ஆத்மி அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, கட்சி மாறியவர்களைக் குறிவைத்து துன்புறுத்துகிறது,” என்று ராகவ் சதா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் முறையீடு:

ராகவ் சதா மற்றும் அவருடன் மூன்று பேர் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, தங்கள் மீது எடுக்கப்பட்டு வரும் அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் குறித்து மனு அளித் தனர். இந்த விவகாரம் பஞ்சாப் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்து வரும்

# வறண்ட வானிலை காரணமாக 10ஆம் தேதி வரை மழை நீடிக்கும்!

சென்னை, மே 8-

தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்து வரும் வறண்ட வானிலை காரணமாக 3 இடங்களில் நேற்று 102 டிகிரி வெயில் கொளுத்தியது. இதற்கிடையே சில இடங்களில் மழையும் பெய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மய்யம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது கத்திரி வெயில் தொடங்கியுள்ளது. இதையடுத்து, பெரும்பாலான இடங்களில் வெப்பநிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 4 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

அதனால் கரூர், ஈரோடு, வேலூர் பகுதிகளில் நேற்று முன்தினம் 102 டிகிரி வெயில் கொளுத்தியது. பிற இடங்களில் சராசரியாக 100 டிகிரி வெயில் நிலவியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 1.5 கிமீ உயரத்தில் தெற்கு மத்திய பிரதேசத்தின் மய்யப் பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரையில் வதர்பா, மரத்வாடா, உள் கருநாடகா மற்றும் தமிழ்நாடு வழியாகவும், தமிழ்நாடு வழியாகவும் ஒரு வளி மண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலை கொண்டுள்ளது.

அதனால் திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நேற்று முன்தினம் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்தது.

அதன் தொடர்ச்சியாக இன்றும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் பலத்த காற்றும் கூடிய கனமழை பெய்யும். இதே நிலை 10ஆம் தேதி வரை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பநிலை இயல்பைவிட 23 டிகிரி செல்சியஸ் வரையில் அதிகரித்து காணப்படும். சென்னையில் 102 டிகிரி வெயில் நிலவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை சென்னை வானிலை ஆய்வு மய்யம் தெரிவித்துள்ளது.

செலவுகள் அதிகரிப்பால் ரூ.6,700 கோடி சேமிக்க

# 2,000 பேரை பணிநீக்கம் செய்ய உள்ள பி.பி.சி. நிறுவனம்!

லண்டன், மே 8-

நிதி நெருக்கடி மற்றும் செயல்பாட்டுச் செலவுகள் அதிகரிப்பு காரணமாக, புகழ்பெற்ற ஊடக நிறுவனமான பி.பி.சி., பணி நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

பி.பி.சி.யின் மிகப் பெரிய செலவுக் குறைப்பு முயற்சிகளில் ஒன்றிற்கான திட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, அந்த நிறுவனம் 2026ஆம் ஆண்டிற்கான பெரும் ஆட்குறைப்பு நடவடிக் கைகளை அறிவித்துள்ளது. பி.பி.சி. நிறுவனம் ரூ.6700 கோடியை சேமிக்கும் திட்டத்தை செயல்படுத்த 2000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுமார் 600 மில்லியன் யூரோ சேமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2,000 ஊழியர்களை குறைக்க பி.பி.சி. திட்டமிட்டு உள்ளது. இதில், செய்திப் பிரிவு விகிதாச்சாரத்திற்கு அதிகமான 15 சதவீதக் குறைப்பை எதிர்கொள்ளும் என தகவல் வெளியாகி இருக்கிறது. கூகுளின் முன்னாள் நிர்வாகியான மாட் பிரிட்டின், வரும் மே 18 அன்று தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்கத் தயாராகி வரும் நிலையில், இந்த தகவல் வெளியாகி இருக்கிறது.

அவர் பி.பி.சி. நிறுவனத்தின் தலைமை இயக்குநராக பொறுப் பேற்ற உடன் இந்த நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என தெரிகிறது. பி.பி.சி., உலகெங்கிலும் கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ளது. மேலும், தனது பார்வையா ளர்களுக்கு சமீபத்திய செய்திகளை வழங்குவதற்காக, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பணியாளர் வலையமைப்புடன் இணைந்து செயல்படுகிறது.

இந்த சூழலில் சமீபத்தில் வெளியாகி இருக்கும் தகவல்களின்படி, குறிப்பாக பி.பி.சி. செய்திப் பிரிவில் இந்த ஆட்குறைப்புகள் எதிர்பார்த்ததை விடக் கடுமையாக இருக்கலாம் என்றும், தலைமைப் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்கெனவே நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பி.பி.சி. எடுக்க திட்டமிட்டு உள்ள ஆட்குறைப்பு நடவடிக்கைகளுக்கான முக்கிய காரணம், அந்த நிறுவனம் மேற்கொள்ள உள்ள செலவு குறைப்பு உத்தி ஆகும். பி.பி.சி. எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகள் காரணமாகவே இந்த ஆட்குறைப்பு முடிவு எடுக்கப்பட்டது.

நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளதற்கு அதிக உற்பத்தி பணவீக்கம், உரிம கட்டண வருவாய் குறைவு (Licence fee pressure), மற்றும் உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஆகியவை காரணமாகக் கூறப்படுகின்றன.

வேலூர் மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளர்

# தா.இரமேஷ் பணி நிறைவு - பாராட்டு விழா!

## கழக முன்னணியினர் - தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்பு!

ஆர்க்காடு, மே 8-

வேலூர் மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளரும், மாவட்ட கவுன்சில் செயலாளருமான தா.இரமேஷ் பணி நிறைவு பாராட்டு விழா 10.5.2026 காலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

ஆர்க்காடு பணிமனை எதிரில் அமைந்துள்ள எஸ்.பி.ஆர்.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறும் இப்பாராட்டு விழாவில், மாவட்டக் கழக முன்னணியினர், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், வேலூர் மண்டல நிர்வாகி கள், போக்குவரத்துக் கழக பணிமனை நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், ஊழியர்கள் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.